DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 178/2019**

**CNR.No: TNTH06-000289 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Town | இராயப்பன்பட்டி |
| Father's Name | : கோபால் | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் : 08.01.2025

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) எனது வழக்குரையில் சொத்து விவரத்தில் வடக்கு பக்க எல்லையாக சர்வே எண்.2031–ல் அமைந்துள்ள கிருஷ்ணன் கோவில் என சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல, வருவாய் துறை ஆவணங்களின் படி நான் குறிப்பிட்டுள்ளேன். வழக்கு கோவிலுக்கு வடக்கே கிருஷ்ணன் கோவில் என்ற கோவிலே கிடையாது என்றால் சரியல்ல, கோவில் உள்ளது. வழக்கு கோவில் அமைந்திருப்பதாக சொல்லப்படும் சொத்தின் சர்வே எண்.2048 என்பது சரிதான். வழக்கு கோவிலுக்கு வடக்கு மற்றும் தெற்கு பக்கங்களிலும் சர்வே எண். 2048–க்கு கட்டுப்பட்ட இடம் தான் உள்ளது என்றால் இல்லை, தெற்கு பக்கம் தான் சர்வே எண்.2048–ற்கான இடம் உள்ளது, வடக்கு பக்கம் சர்வே எண்.2048 –ற்கான இடம் இல்லை.

2) வழக்கு கோவிலுக்கு ஒட்டினாற்போல் வடக்கில் சர்வே எண்.2048–ற்கு கட்டுப்பட்ட இடம் தான் உள்ளது என்றாலும், அதனை அடுத்து சர்வே எண்.2031–க்கு கட்டுப்பட்ட இடம் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு கோவிலுக்கு தெற்கு பக்கம் 300 அடி தொலைவில் சுருளியாறு அமைந்துள்ளது என்றால் இல்லை, 100 அடி தொலைவிற்குள் ஆறு அமைந்துள்ளது. அப்படியானால் வழக்கு கோவிலுக்கு தெற்கு பக்கம் மாலாக சுருளியாறு அமைந்திருப்பதாக சொத்து விவரத்தில் குறிப்பிட்டிருப்பது தவறு என்றால் ஆமாம் தவறுதான்.

3) வழக்கு கோவிலுக்கு கிழக்கு பக்கம் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த கிழக்கு பக்கமுள்ள ரோடு சர்வே எண்.2048 சொத்திற்குள் தான் கட்டுப்பட்டு அமைந்துள்ளது என்றால் சரியல்ல, சர்வே எண்.2050/1–ல் கட்டுப்பட்டதாகும். வழக்கு கோவிலுக்கு கிழக்கு பக்கமுள்ள ரோடு ஆனது சர்வே எண்.2050/1 சொத்தில் தான் அமைந்துள்ளது எனக்கூறுவதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால், அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்கிறேன். சர்வே எண்.2048 சொத்திற்கு மேற்கே உள்ள சொத்து சர்வே எண்.2027 என்றால் சரிதான். சர்வே எண்.2027–ல் கட்டுப்பட்ட இடமானது 4–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4) 4–ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான சர்வே எண்.2027 இடத்தை சுற்றி கல்கால் ஊன்றி கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு கோவிலுக்கு 4 பக்கமும் சுற்று சுவர் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு கோவில் சுற்று சுவருக்கும் அதன் மேற்கு பக்கம் உள்ள சர்வே எண்.2027 இடத்திற்கான கம்பி வேலிக்கும் இடையே காலி இடம் உள்ளதா என்றால் ஒரு அடி அகலம் கொண்ட பாதை மட்டுமே உள்ளது. நான் கூறுவது போல ஒரு அடி அகலம் உள்ள பாதை இல்லை என்றாலும் அந்த பாதையானது சுமார் 5 அடி அகலம் கொண்ட பாதை என்றால் சரியல்ல. எனது வழக்குரையின் சொத்து விவரத்தில் தென்வடல் அளவாக 87 அடி என சொல்லப்பட்டிருப்பது தவறு என்றாலும், உண்மையில் தென்வடல் அளவானது 45 அடி தான் இருக்கும் என்றாலும் சரியல்ல.

5) வழக்கு கோவில் ஆனது சுருளியாற்றுக் கரையில் அமைந்துள்ளது என நான் வழக்குரையில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. அதன்படி எனது வழக்குரையில் நான் தெரிவித்திருக்கும் சொத்து விவர சங்கதிகளே தவறானவை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு கோவில் ஆனது எப்போது கட்டப்பட்டது என்றால் 2010–ம் ஆண்டில் புணர் அமைப்பு செய்யப்பட்டு 2017–ம் ஆண்டில் கும்பாபிசேகம் நடத்தப்பட்டது. வழக்கு கோவில் புணரமைப்பதற்கு முன்பு அங்கிருந்ததாக சொல்லும் வட்டக்கோவில் சிறியளவில் இருந்தது என்றால் இல்லை, அதுவும் பெரியளவில் தான் இருந்தது. அதன் நீளம், அகலம் சொல்ல முடியுமா என்றால், இல்லை எனக்கு தெரியாது 4 ஏர்ஸ் அளவில் இருந்தது.

6) வழக்கு கோவில் முன்பு இருந்த வட்டக்கோவிலானது 10 அடிக்கு 10 அடி அளவில் மட்டுமே இருந்தது என்றாலும் நான் வழக்கிற்காக 4 ஏர்ஸ் அளவில் இருந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.2048 சொத்தானது வருவாய் துறை ஆவணங்களின் படி புறம்போக்கு என பதிவாகியிருந்தது என்றால் சரிதான், ஆனால், பத்திரப்பதிவு மற்றும் வனத்துறை ஆவணங்களின் படி பண்டாரத்துறை பதிவாகியிருந்தது. அவ்வாறு பத்திரப்பதிவு மற்றும் வனத்துறை ஆவணங்களின் படி பண்டாரத்துறை பதிவாகியிருந்ததாக கூறுவதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்கின்றேன்.

7) வழக்கு கோவில் சர்வே எண்.2048 சொத்தானது புறம்போக்கு இடத்தை சேர்ந்தது என்றாலும், நான் கூறுவதைபோல பண்டாரத்துறை என வனத்துறை அல்லது பத்திரப்பதிவு துறை ஆவணங்களில் பதிவாகியிருந்தால் அது தவறான பதிவு என்றால் சரியல்ல. 2007—ம் ஆண்டில் சுருளி நீர்விழ்ச்சி தொடர்புடைய வழக்கு சர்வே எண்.2048—ற்குரிய பகுதிகளிலும் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நடைபெற்றது என்றால் சரிதான். 04.07.2007—ம் ஆண்டில் அவ்வாறு ஆக்கிரமிப்புகளை அகற்றிய சமயத்தில் முன்பு இருந்ததாக சொல்லும் வட்டக்கோவிலை இடித்து விட்டனர் என்று சொன்னால், அந்த சமயத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

8) 2007— ம் வருடத்தில் நான் பூசாரியாக இருந்தேனா என்றால் இல்லை, அப்போது திருமலை சாமாண்டி என்பவரின் மனைவி ரங்கநாயகியம்மாள் என்பவர் பூசாரியாக இருந்தார். 04.07.2007—ம் தேதியிலேயே வட்டக்கோவில் இடிக்கப்பட்டு விட்டது என்றாலும், நான் சிதிலமடைந்து இருந்த வட்டக்கோவிலை புணரமைப்பு செய்து கோவில் கட்டப்பட்டதாக தெரிவித்துள்ள வழக்குரை சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. வழக்கு கோவிலை நான் நிர்வாகம் செய்யவில்லை என்றும், நான் பூசாரி மட்டுமே என்றும் 1 முதல் 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் போது நான் கூறியிருப்பதால், வழக்கு கோவிலை யார் நிர்வாகம் செய்கிறார் என்றால் திருமலை சாமாண்டி என்பவரின் மனைவி ரங்கநாயகியம்மாள் என்பவர் நிர்வாகம் செய்து வந்தார், அவர் காலம் ஆன பிறகு நிர்வாகம் கிடையாது

பூசாரி மட்டுமே. ரங்கநாயகி அம்மாள் நிர்வாகம் செய்து வந்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடுத்த வாய்தாவில் தாக்கல் செய்கிறேன்.

9) வழக்கு சொத்து வழக்கு கோவிலுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரும்பரிகாரம் எதன் அடிப்படையில் கோரியுள்ளேன் என்றால், அசல் வழக்கு எண்.2 குறுக்கு விசாரணையின் போது நான் கூறியிருப்பதால், வழக்கு கோவிலை யார் நிர்வாகம் செய்கிறார் என்றால் திருமலை சாமாண்டி என்பவரின் மனைவி ரங்கநாயகியம்மாள் என்பவர் நிர்வாகம் செய்து வந்தார், அவர் காலம் ஆன பிறகு நிர்வாகம் கிடையாது பூசாரி மட்டுமே. ரங்கநாயகி அம்மாள் நிர்வாகம் செய்து வந்தார் என்பதை நிரூ04/2010 வழக்கில் 2,3 பிரதிவாதிகள் தாக்கல் செய்து நடத்தி வந்ததன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன், அந்த வழக்கின் மீது இரண்டாம் மேல்முறையீடு வழக்கானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நான் கூறும்அசல் வழக்கு எண்.204/2010 வழக்கானது 4ம் பிரதிவாதியால் கம்பம் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் மற்றும் சுருளி பட்டி பஞ்சாயத்து தலைவர் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான்.

10) அசல் வழக்கு எண்.204/2010 வழக்கில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோரியிருக்கிறேனா என்றால் ஆமாம். வழக்கு கோவிலின் தோற்றம் மற்றும் அதன் சிறப்புகளாக இந்த வழக்குரையில் நான் தெரிவித்திருக்கும் சங்கதிகள் அனைத்தும் எனது கற்பனையே என்று சொன்னால் சரியல்ல.

**4–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**